DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ராக்கம்மாள் | Caste: | |
| Husband Name: | பூமிநாதன் | Calling: | கூலி வேலை |
| Village: | பாப்பான்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.08.2025

( 1ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். மற்ற எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா பாப்பான்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சா.ப.சா.2 பூமிநாதன் என் கணவர். சா.ப.சா.5. மலைராஜ், 6 ஈஸ்வரி என் மகன் மற்றும் மகள். சா.ப.சா.3 முனியசாமி, 4 லண்டன் மகன் முனியசாமி பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் தேவர் சமூகத்தை சேர்ந்தவர்கள். நாங்கள் பள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்கள். 2ம் எதிரி சதீஷ்குமார் 5 வருடங்களுக்கு முன்பு ஆகஸ்டு மாதம் 7ம் தேதி காலை 8.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வரும் மின்சாரத்தை துண்டித்துவிட்டார். மற்ற வீட்டில் மின்சாரம் இருந்தது என் வீட்டிற்கு மட்டும் வரவில்லை. நான் என் கணவரிடம் எல்லார் வீட்டிலும் மின்சாரம் உள்ளது. நம் வீட்டில்மட்டும் மின்சாரம் இல்லை என்று சொன்னேன். என் கணவர் 2ம் எதிரி சதீஷ்குமார்–டம் சென்று எல்லார் வீட்டிலும் இருக்கிறது என் வீட்டில் மட்டும் மின்சாரம் இல்லை. அதற்கு 2ம் எதிரி என் கணவரை பார்த்து பள்ள தேவுடியா மகனே என்று

பேசியதால் இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. அங்குள்ளவர்கள் சத்தம் போட்டதால் என் கணவரும் 2ம் எதிரி சதீஷ்குமாரும் வந்துவிட்டார்கள். எப்பொழுதும் என் கணவர் மாலையில் கமுதிக்கு டீ குடிக்க செல்வார். அன்று மாலை 5 மணியளவில் என் கணவர் கமுதிக்கு டீ குடிக்க சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்துள்ளார். என் கணவர் கமுதியில் இருந்து 1 பர்லாங் தூரம் வந்தபிறகு 4ம் எதிரி முருகன் பைக்கில் வந்துள்ளார். என் கணவரை 4ம் எதிரி முருகன் அவரது பைக்கில் ஏற்றி வந்துள்ளார். 1 முதல் 3 எதிரிகள் அருவாள் கம்புடன் சென்றுள்ளார்கள். ஒரு ஓடைக்கு அடுத்து முத்துநாகு சமாதி உள்ளது. அந்த இடத்திற்கு வந்தபோது 1ம் எதிரி முத்துமணி என் கணவரை பார்த்து ஏன்டா பள்ள பயலே நீ என்னடா செய்துவிடுவாய் வண்டியை விட்டு இறங்கு என்று சொல்லியுள்ளார். 1ம் எதிரி முத்துமணி செம்மநெறிஞ்சி கிராமத்தை சேர்ந்தவர். 3ம் எதிரி ராம்குமாரின் அம்மா பிறந்த ஊர் எங்கள் ஊர். ராம்குமாரின் ஊர் உடையாவட்டம். முத்துமணி வந்தவுடன் அருவாளை வைத்து என் கணவரை வெட்டியுள்ளார். என் கணவர் வலதுகையை வைத்து மறித்தபோது மற்றவர்கள் என் கணவரை சுற்றி நின்றுள்ளார்கள். எதிரிகள் நால்வரும் என் கணவரை அடிக்க வந்துள்ளார்கள். என் கணவர் அவர்களிடமிருந்து தப்பித்து ஊரை நோக்கி ஓடிவந்தார். 1ம் எதிரி முத்துமணி வெட்டியதில் என் கணவருக்கு கையில் காயம் ஏற்பட்டது. ஊரில் உள்ளவர்கள் வெட்டிவிட்டார்கள் வெட்டிவிட்டார்கள் என சத்தம் போட்டதால் நான் என் கணவர் கமுதி சென்றுள்ளாரே என நினைத்து நானும் என் மகனும் ஓடிவந்தோம். ஓடிவந்து பார்த்தபோது வெட்டுபட்டவர் என் கணவர் என்பதை தெரிந்துகொண்டேன். அதன்பிறகு என் மகன் பைக் மூலம் என் கணவரை கமுதி அரசு மருத்துவமனைக்கு கொண்டு

சென்றான். என் கணவரிடம் விவரம் கேட்டபோது அவர் நடந்த சம்பவத்தை என்னிடம் சொன்னார். கமுதி அரசு மருத்துவமனைக்கு போலிசார் வந்தார்கள். நான் என் கணவர் என்னிடம் சொன்ன விவரத்தை சொன்னேன். போலிசார் எழுதி கொண்டு, என்னிடம் வாசித்து காண்பித்தார்கள். என்னிடம் கையெழுத்து போடச் சொன்னார்கள், போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1.** அப்போது மணி 7 ஆகிவிட்டது. கமுதியில் பார்க்க முடியாது அருப்புக்கோட்டைக்கு கொண்டு செல்லுங்கள் என்று சொன்னார்கள். அருப்புக்கோட்டைக்கு கொண்டு செல்லும்போது மணி 9 ஆகிவிட்டது. அங்கும் பார்க்க முடியாது மதுரைக்கு கொண்டு செல்லுங்கள் என சொன்னார்கள். மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லும்போது இரவு 11 மணி ஆகிவிட்டது. அங்கு என் கணவர் 10 நாட்களுக்கு மேல் சிகிச்சையில் இருந்தார். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் எதிரி எங்கள் வீட்டிற்கு வரும் மின்சாரத்தை துண்டித்துவிட்ட விவரம் எங்கள் ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும் என்றால் சரிதான். அதுசம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. காலையில் வீட்டில் யார் யார் இருந்தோம் என்றால் நானும் என் கணவரும் இருந்தோம். நானோ என் கணவரோ EB ல் புகார் கொடுத்தோமோ என்றால் இல்லை. இரவு 8 மணியளவில்தான் என் வீட்டிற்கு மின்சாரம் வந்தது. EB ல் இருந்து வந்து மின் இணைப்பு கொடுத்தார்களா என்றால் தெரியாது. நாங்கள் வீட்டில் இல்லை. நான்

முதல்விசாரணையில் சொன்ன விவரங்களைதான் போலிசார் என்னை விசாரிக்கும்போதும் சொன்னேனா என்றால் ஆமாம். நான் சொன்னதுபோல் காலையில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், 1ம் எதிரி மீது உள்ள முன்பகையின் காரணமாக மற்ற எதிரிகள் அனவைரையும் சேர்த்து இந்த புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் கமுதிக்கு எத்தனை மணிக்கு சென்றார் என்றால் மாலை 5.00 மணி. என் கணவர் கமுதிக்கு எதில் சென்றார் என்றால் பைக்கில் சென்றார். என் கணவருக்கு பைக் ஓட்ட தெரியும் என்றால் சரிதான். எங்களிடம் பைக் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 6.45 மணி. சம்பவம் நடந்த இடத்திற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கி.மீ. சம்பவ இடத்திற்கு நான் எதில் சென்றேன் என்றால் நடந்தே சென்றேன். எனது கணவர் நான் போகும் வழியிலேயே வந்துவிட்டார். சம்பவ இடத்திலிருந்து என் கணவரை கமுதி மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு அழைத்து சென்றேன் என்றால் 7 மணி. கமுதி மருத்துவமனைக்கு என் கணவரை யார் யார் கூட்டி சென்றோம் என்றால் நான் என் மகனுக்கு போன் போட்டு வரவழைத்து என் மகன் கூட்டி சென்றார். என் மகன் எதில் கூட்டி சென்றான் என்றால் பைக்கில். என் கணவரும் என் மகனும்தான் பைக்கில் சென்றார்கள். இதுசம்பந்தமாக காவல்நிலையத்தில் நாங்கள் மூவரும் சென்று புகார் கொடுத்துவிட்டுதான் மருத்துவமனைக்கு சென்றோம். புகார் கொடுக்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 8 இருக்கும். காவல்நிலையத்தில் புகார் எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை, நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதி கொண்டார்கள். மருத்துவமனைக்கு

போலிசார் எத்தனை மணிக்கு வந்து எங்களை விசாரித்தார்கள் என்றால் 8– 8.30 மணியளவில் வந்தார்கள். எங்களிடம் எவ்வளவு நேரம் எழுதி வாங்கினார்கள் என்றால் அரை மணி நேரம் இருக்கும். இந்த சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் கணவர் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். மருத்துவமனையில் என் கணவர் சுயநினைவுடன்தான் இருந்தார் என்றால் சரிதான். நடந்த விவரத்தை மருத்துமவனையில் வைத்துதான் கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் என்னிடம் கையெழுதது பெறும்போது என் மகன்களிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. என்னிடம் எழுதி வாங்கிய போலிசாரின் தகுதி நிலை (Rank) பற்றி தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் ஊரில் விசாரித்தார்கள். விசாரித்த அதிகாரியின் தகுதி நிலை பற்றி தெரியாது. 2 முதல் 4 எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்பந்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், என் கணவர் 1ம் எதிரியின் மீது உள்ள முன்பகையின் காரணமாக 1ம் எதிரியின் நண்பர்களான 2 முதல் 4 எதிரிகள் மீது பொய்யாக புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 2 முதல் 4 எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் காயம் ஏற்படவில்லை என்றும், இந்த எதிரிகளால் என் கணவருக்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

Sd./C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பூமிநாதன் | Caste: | |
| Father's Name: | கருப்பணன் | Calling: | விவசாய வேலை |
| Village: | பாப்பான்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 64 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.08.2025

( 1ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். மற்ற எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா பாப்பான்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் மனைவி. சா.ப.சா. 5. மலைராஜ், 6 ஈஸ்வரி என் மகன் மற்றும் மகள். சா.ப.சா.3 முனியசாமி, 4 லண்டன் மகன் முனியசாமி பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் தேவர் சமூகத்தை சேர்ந்தவர்கள். நாங்கள் பள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்கள். எதிரிகள் நால்வரும் சேர்ந்து என்னை வெட்டியதற்காக என் மனைவி புகார் கொடுத்தார். நான் எப்பொழுதும் கமுதிக்கு சென்று டீ குடித்துவிட்டு வருவது வழக்கம். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஆகஸ்டு மாதம் 7ம் தேதி நான் கமுதிக்கு சென்று டீ குடித்துவிட்டு நான் வீட்டிற்கு நடந்து வந்து கொண்டிருந்தேன். நான் கமுதி சந்தை பேட்டை அருகே வந்துகொண்டிருந்தபோது 4ம் எதிரி முருகன் TVS 50 வாகனத்தில் என்னை மறைத்து நான் ஊருக்குதான் செல்கிறேன் என்று சொல்லி என்னை ஏற்றி கொண்டு வந்தார். கமுதிக்கும் எங்கள் ஊருக்கும்

இடையில் சின்ன ஓடை என்றொரு ஓடை உள்ளது. அதை தாண்டி நாகம்மா சமாதி அருகே செல்லும்போது அந்த இடத்தில் முத்துமணி, சதீஷ் மற்றும் ராம்குமார் மூவரும் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். நானும் முருகனும் அங்கு சென்றபோது வண்டியை மறித்தார்கள், நான் இறங்கினேன். அப்போது முத்துமணி நான்தான் முருகனிடம் உன்னை அழைத்து வர சொன்னேன் என்று சொன்னான். அத்துடன் முத்துமணி அருவாளை வைத்து என் கழுத்தை நோக்கி வெட்டும்போது நான் சற்று விலகி என் கையால் தடுத்தபோது எனது வலது கை முழங்கைக்கு கீழ் பகுதியில் மாறி மாறி இரண்டு வெட்டு விழுந்தது. ராம்குமாரும் முருகனும் கம்பால் என்னை அடித்தார்கள். நான் விழுந்து தெற்கு புறமாக ஊரை நோக்கி ஓடினேன். நான் ஊருக்குள் சென்று வீட்டுக்குள் நுழையும்போது இடையில் விழுந்துவிட்டேன். 1,2 எதிரிகளான முத்துமணியும், சதீஷ்குமாரும் இன்னைக்கு தப்பித்துவிட்டாய் பள்ளப்பயலே என்றைக்கு இருந்தாலும் உன் சாவு எங்கள் கைகளில்தான் என்று சொன்னார்கள். என் மகன் மலைராஜிக்கு தகவல் தெரிவிக்கும்படி அங்குள்ளவர்களிடம் சொன்னேன். என் மகன் உட்பட ஊரே திரண்டு கத்திக்கொண்டு வந்தார்கள். என் மகனே பைக்கில் கமுதி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் என் மனைவியிடம் நடந்த விவரத்தை சொன்னேன். என் உடல்நிலை மோசமாக இருந்ததால் அருப்புக்கோட்டை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கும் பார்க்க முடியாது மதுரைக்கு கொண்டு செல்லுங்கள் என சொன்னதால் மதுரைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு 10,15 நாட்கள் சிகிச்சை பெற்றேன். என் மனைவி புகார் கொடுத்தார். மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னை வெட்டிய அருவாளை

அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் இரண்டு அருவாள்களில் சின்ன அருவாளை வைத்து முத்துமணியும், பெரிய அருவாளையும் வைத்து சதீஷ்–ம் வெட்டினார்கள். நீதிமன்றத்தில் உள்ள கம்புகளை கொண்டுதான் 3,4 எதிரிகள் என்னை அடித்தார்கள். அந்த சின்ன அருவாள் **அ.சா.பொ.1**, பெரிய அருவாள் **அ.சா.பொ.2** . சிறிய கட்டை கம்பு **அ.சா.பொ.3**. பெரிய கட்டை கம்பு **அ.சா.பொ.4**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த அன்று எத்தனை மணிக்கு என் ஊரில் இருந்து கமுதிக்கு சென்றேன் என்றால் 5 மணி. நான் கமுதிக்கு என்னுடைய TVS 50 ல் சென்றேன். கமுதியில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் 5,30 மணிக்கு கிளம்பினேன். என் ஊரிலிருந்து கமுதி ஒன்றரை கி.மீ தூரம் இருக்கும். பைக்கில் சென்றால் 15 நிமிடங்களிலிருந்து 20 நிமிடங்களில் செல்லலாம் என்றால் சரிதான். சம்பவம் சரியாக எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 6.00 மணி இருக்கும். சம்பவம் நடந்தவுடன் நான் என் வீட்டிற்கு ஓடிவந்தேன் என்றால் சரிதான். நான் ஊருக்கு ஓடிவந்தவுடன் எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எங்கள் கிராமத்தில் எல்லா சமூகத்தை சேர்ந்தவர்களும் உள்ளார்கள் என்றால் பிள்ளைமார், தேவர் மற்றும் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே உள்ளோம். எங்கள் ஊரில் இதுவரை சாதி பிரச்சனை ஏற்பட்டதில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரில் கோவில் திருவிழாக்கள் எல்லா சமூகமும் சேர்ந்துதான் கொண்டாடுவோம் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையில் சொன்னதைதான் நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து

மருத்துவமனைக்கு சென்றபோது மணி 7–7.15 இருக்கும். என் மகனது பைக்கில் சென்றோம். அந்த பைக்கில் நானும் என் மகனும்தான் சென்றோம். என் மனைவி கமுதி அரசு மருத்துவமனைக்கு 7–8 மணியளவில் வந்தார். நான் கமுதி மருத்துவமனையில் 10–15 நிமிடங்கள்தான் இருந்தேன். உடனே அருப்புக்கோட்டைக்கு கொண்டுபோக சொன்னார்கள். அருப்புக்கோட்டை அரசு மருத்துமவனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் இரவு 9.00 மணி இருக்கும். அருப்புக்கோட்டை மருத்துமவனைக்கு செல்லும்போது என் மனைவி என்னுடன் வந்தார் என்றால் சரிதான். அருப்புக்கோட்டை மருத்துவமனையில் எத்தனை மணி வரை இருந்தோம் என்றால் இரவு 10.00 மணிவரை இருந்தோம். கமுதியில் இருந்து அருப்புக்கோட்டை மருத்துமவனைக்கு எதில் சென்றோம் என்றால் ஆம்புலன்ஸில் சென்றோம். அருப்புக்கோட்டையிலிருந்து மதுரை அரசு மருத்துவனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் இரவு 11–11.15 இருக்கும். அப்போதும் என் மனைவி என்னுடன் மதுரைக்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். நடந்த விவரத்தை என் மனைவியிடம் எங்கு வைத்து சொன்னேன் என்றால் கமுதி அரசு மருத்துவமனையில் வைத்து சொன்னேன். போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரிக்கும்போது இரத்தக்கரைபடிந்த ஆடைகளை வாங்கினார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரித்தார்கள். எந்த காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் கமுதி காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். முருகன் என்பவர் சதீஷ்–ன் அப்பா என்றால் சரிதான். சதீஷ்–ம் முத்துமணியும்

நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். 2 முதல் 4 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எனக்கும் 1ம் எதிரி முத்துமணிக்கும் உள்ள முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு மற்ற எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும், வழக்கு சம்பவத்திற்கும் 2 முதல் 4 எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த சமயம் கொரானோ தொற்று என்பதால் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜராகவில்லை. குறுக்கு விசாரணை இல்லை.

Sd./C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.25/2023**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முனியசாமி | Caste: | |
| Father's Name: | சுந்தர்ராஜ் | Calling: | விவசாய வேலை |
| Village: | பாப்பான்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 54 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.08.2025

( 1ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். மற்ற எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா பாப்பான்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1,2 சாட்சிகளை தெரியும். என் உள்ளூர்காரர்கள். 2,4 எதிரிகளை தெரியும். உள்ளூர்காரர்கள். 1,3 எதிரிகளை தெரியாது. அ.சா.1 எதிரிகள் மீது கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 07.08.2020ம் தேதி காலை பூமிநாதன் வீட்டில் கரண்ட் இல்லாததால் அவரது மனைவி ராக்கம்மாள் என்ன ஏது என்று பார்க்க சொன்னபோது வெளியில் சென்று பூமிநாதன் பார்த்தபோது பக்கத்து வீடுகளில் எல்லாம் கரண்ட் உள்ளதாகவும், நம்ம

வீட்டில் மட்டும் இல்லை என்று கூறிவிட்டு யாருடா சப்ளை கட் பன்னியது என்று கேட்டபோது சதீஷ்குமார் நான்தான்டா கட் பன்னேன், என்னடா செய்ய போற என்று சொன்னார். பின்பு சாயங்காலம் சின்னஓடை முத்துநாகு சமாதி அருகே பூமிநாதன் கமுதி சென்றுவிட்டு திரும்பி வரும்போது முத்துமணி, சதீஷ்குமார், ராமு என்ற ராம்குமார், முருகன் ஆகியோர் அருவாள் மற்றும் கம்புகளை வைத்துக்கொண்டு வழிமறித்து முத்துமணி பூமிநாதனை பார்த்து டேய் வண்டியை விட்டு இறங்குடா என்று கூறி ஏன்டா பள்ளத் தேவுடியா பயலே உனக்கு எவ்வளவு திமிறா இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி அவர் கையில்வைத்திருந்த அருவாளால் பூமிநாதனை வெட்டியபோது அவரது வலது கையால் தடுத்ததில்அவரது வலது கை மணிக்கட்டிற்கு மேல்பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பூமிநாதன் சத்தம் கேட்டு முத்துராமு தேவர் மகன் அய்யனார் என்பவர் வந்து அவர்களை சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டார் என்றும், பூமிநாதன் சுதாரித்துகொண்டு உயிருக்கு பயந்து ஓடும்போது முத்துமணி, சதீஷ்குமார், தங்கள் கைகளில் வைத்திருந்த அருவாளை காட்டியும் ராம்குமார் மற்றும் முருகன் தங்கள் கைகளில் வைத்திருந்த கம்புகளை காட்டி ஏன்டா பள்ள தேவுடியா பயலே இன்றைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி சென்றதாகவும் பின்பு பூமிநாதன் அவரது மகன் மலைராஜ்க்கு தகவல் சொல்லி அவர் மருத்துவமனை சென்று சிகிச்சையில் சேர்த்தார் என்றும் பிரச்சனை சம்பந்தமாக பூமிநாதன் மனைவி ராக்கம்மாள் கமுதி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்று கடந்த 04.09.2020ம் தேதி கமுதி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் விசாரிக்கும்போது

சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உள்ளூர்காரர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd./C.Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)